# இறைவன் எங்கே இருக்கிறான்?



முத்தமிழ் அறிஞர்
கலைஞர் அவர்கள்

ஒவ்வொரு ஆண்டும் தன் பிறந்தநாளில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து நடைமுறைப் படுத்தினார்கள்.

அதன்படி கலைஞர் அவர்களின் 47 ஆவது பிறந்த நாளில், தமிழ்நாட்டில் ஆதரவற்ற குழந்தைகளை வளர்க்க திருக்கோயில்களில் கருணை இல்லங்களை முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

ஆதரவற்ற குழந்தைகளை வளர்க்க திருக் கோயில்களில் "கருணை இல்லங்களை" த் திறந்திட்ட தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு விழா 1970 ஆம் ஆண்டு சென்னையில் தெய்வீகப் பேரவையின் சார்பில் நடைபெற்றது.

இனமானம் போற்றிய தமிழ்த் துறவி தவத்திரு குன்றக்குடி தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார், ஆதினகர்த்தர்கள் மற்றும் சான்றோர் பெருமக்கள் பங்கேற்றார்கள்.

ஏற்புரை வழங்கிய முதல்வர் கலைஞர் அவர்கள்.....

நான் கடவுளை நம்புகிறேனா,
இல்லையா என்பது முக்கியமல்ல;
கடவுள் நம்பும் அளவிற்கு நாம் நடந்து கொள்கிறோமா என்பதே முக்கியம்.

குருட்டு மனிதன்
இருட்டு அறையில்
கருப்புப் பூனையைத்
தேடுவதுபோல் சிலர்
கடவுளைத் தேடி அலைகிறார்கள்.
இறைவன் எங்கே
இருக்கிறான் தெரியுமா ?
விவேகியின் விழியில்
விஞ்ஞானியின் அறிவில்
பாட்டாளியின் வியர்வையில்
பெண்ணின் கற்பில்
குழந்தையின் மழலையில்
ஏழையின் சிரிப்பில்
இறைவன் இருக்கின்றான்
என்று கலைஞர் உரையாற்றியதை கேட்டு,
உள்ளம் மகிழ்ந்து
கையொலி எழுப்பினர்.

**கே.வி.ஆர்.**

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞரின்

# ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் புகழ் அஞ்சலி!

## மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!



ஈரோடு, ஆக. 7-

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாகஇலக்கியவாதியாகதிரைப்படத் தயாரிப்பாளராகதலைச்சிறந்த நிர்வாகியாகதமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர் காஞ்சி தந்த காவியத்தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்ற கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முனேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5வது நினைவு நாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் அறிவிப்புக்கிணங்க "அமைதிப் பேரணி" இன்று மாலை 4 மணிக்கு ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அருகில்ருந்து புறப்பட்டு, மணிகூண்டு, சக்தி ரோடு பேருந்துநிலையம், மேட்டூர் ரோடு, வழியாக முனிசிபல் காலனி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பேரணி நிறைவு பெறுகிறது.

எனவே, மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், ஊர் கிளை கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் பேரணியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கலைஞரின் பேனா!



**மு**க்குலத்தோர் சமூகத்தை **குற்றப் பரம்பரையினர்** என அரசு ஆவணங்களில்குறிப்பிடப் பட்டதை மிக அழகாக நாகரிகமாக **சீர் மரபினர்** என அழகு தமிழில் அரசு ஆவணங்களில் எழுத ஆணையிட்டார். அது போல "நொண்டி, ஊமை, குருடன்" என நாகரிகமில்லாமல் அழைத்ததை மாற்றி "**மாற்றுத் திறனாளி**" என மனிதாபிமானம் பொங்கும் சொற்களில் எழுதி மாற்றியது தான் **கலைஞரின் பேனா** . மூன்றாம் பாலினத்தவரை "அலி" என்றும் "ஒன்பது" என்றும் இந்த பாழாய்ப்போன சமூகம் அழைத்துக்கொண்டிருந்தது. அவர்களை **திருநங்கைகள், திருநம்பி** என்றும் எழுதி அவர்களின் மனம் குளிர்வித்தது தான் கலைஞரின் பேனா.

ஏ.ஆர்.ரஹ்மானின் 30 வருட இசைப்பயணம்:

# ஏ.ஆர்.ஆர்.திரைப்பட விழா அறிவிப்பு!

சென்னை, ஆக.6 -

இசை புயல் ஏ.ஆர்.ரஹ்மான் திரையுலகிற்கு வந்து 30 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இதை கொண்டாடும் விதமாக ஏஆர்ஆர் திரைப்பட விழா ஆகஸ்ட் 4 அன்று துவங்கி, ஆக.9 வரை சென்னை மற்றும் கோவையில் நடைபெற்று வருகிறது.

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் மணிரத்னம் இயக்கிய 'ரோஜா' திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி, தன் முதல் படத்திலேயே இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்த அற்புத இசை கலைஞர் ஆவார். கிழக்குச் சீமையிலே, காதலன், பம்பாய் என தொடர்ந்த அவரது இசைப் பயணம் 30 ஆண்டுகளை கடந்து இன்றைய 'மாமன்னன்' வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நிகழ்ச்சிகள்!

8– 8 – 2023 காலை – ஆர்.கே.நகர், சென்னை வடக்கு
8 – 8 – 2023 மாலை – சேலம் – சேலம் மத்திய மாவட்டம்
9– 8 – 2023 – ஓமலூர் – சேலம் மத்திய மாவட்டம்,
10– 8– 2023 –இராதாபுரம் – திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்,
12– 8 – 2023 – மீஞ்சூர் – திருவள்ளூர் கிழக்கு
13 – 8 – 202 – மாதவரம் – சென்னை வடகிழக்கு
17 – 8 – 2023 இராமநாதபுரம்– இராமநாதபுரம் மாவட்டம்
25 – 8 –2023 – தஞ்சை – தஞ்சை மத்திய மாவட்டம்
26 – 8 – 2023 – பட்டுக்கோட்டை – தஞ்சை தெற்கு மாவட்டம்
30 – 8 –2023 – தொண்டாமுத்தூர் – கோவை வடக்கு மாவட்டம்
31 –8 – 2023 – காரமடை – கோவை வடக்கு மாவட்டம்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில்

# காஞ்சி மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் அமைதிப் பேரணி!

## கழகத்தினர் அனைவரும் பங்கேற்றிட மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக. 7 -

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் காஞ்சி மாநகரில் மாபெரும் அமைதி பேரணி நாளை (7.8.2023) காலை நடைபெறுகின்றது. இந்த அமைதிப்பேரணியில் மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முழுமையான பங்களிப்பை அளித்தவர் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான், அவரது ஆட்சி ஏழை எளிய மக்களுக்கு பொற்கால ஆட்சியாகத் திகழ்ந்தது, சிறுபான்மை மக்களுக்கு மேன்மை தங்கிய ஆட்சியாகத் திகழ்ந்தது. நடுத்தர மக்களுக்கு நலம் பயக்கும் ஆட்சியாக விளங்கியது.

விவசாயிகளுக்கு நன்மை தரும் ஆட்சியாக, மாணவர்களுக்கு கல்வித் தரும் ஆட்சியாக, பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களை கைதூக்கி விடும் ஆட்சியாக விளங்கியது. குறிப்பாக இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது, விவசாயிகளின் கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு இலவச நிலம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் சட்டம், தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் மளிகை பொருட்கள் விற்பனை, ரேஷன் கடைகளில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வழங்கி, இன்றைக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது என்றால் அதற்கு கலைஞர் அவர்களின் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கிவித்திட்டதே காரணம்.

மகளிர் மகப்பேறு நிதி உதவித் திட்டம், கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு இலவச கல்வித் திட்டம், மருத்துவ இன்ஜினியரிங் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து என்று அப்பப்பா எத்தனை எத்தனை திட்டங்கள். அவரது அடியொற்றி கழகத் தலைவர் நமது முதல்வர் மு.க.ஸ்டலின் அவர்கள் தற்போது மகளிர்க்கு இலவச பேருந்து திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்று மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் என்ற பெயரில் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டம் என்று கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் நலனுக்கு, தமிழ் மக்களின் நலனுக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்.

தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்காக கண்துஞ்சாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, தமிழினத் தலைவர்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7.8.2023) காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, ஊராட்சி கிளைக் கழக அலுவலகங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி கலைஞர் அவர்களின் புகழ் ஓங்கச் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் காஞ்சிபுரம் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (7.8.2023-திங்கள்கிழமை) காலை 7 மணிக்கு, காஞ்சிபுரம் தந்தை பெரியார் தூண் (காந்தி ரோட்டில்) அருகில் இருந்து என் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமையில் மாபெரும் அமைதிப் பேரணி துவங்கி டி.கே. நம்பி தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகம் பவள விழா மாளிகையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஹைவேவிஸ் எம். மனோகரன்**
**ஆகஸ்ட் 7 (2017)**



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த மலைப் பிரதேசமான ஹைவேவிஸ் பேரூர்க் கழகச் செயலாளராகவும் – இருபத்தெட்டு ஆண்டுகள் ஒன்றுபட்ட மதுரை மாவட்ட தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

முத்தமிழறிஞர் கலைஞர் 5ம் ஆண்டு நினைவு நாள்!

# திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பூர், ஆக.6-

தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்களையும் உயிர் மூச்சாக கொண்டு கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இனம், தமிழ் மொழி காக்கும் பொறுப்பினை தன் தோளிலே சுமந்து தமிழ் மொழி காத்து, வெற்றி நடை போட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

1969 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழ்ச் சமுதாய மக்களின் நலன் காக்கும் எண்ணிலடங்கா திட்டங்கள், தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாத்தல், சமூக நீதி, மத நல்லிணக்கம், ஒடுக்கப்பட்டோர் உரிமையினை பாதுகாத்தல் எனதொடர்ந்து உழைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக கண்துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியாருக்கு பிறகு, பேரறிஞர் அண்ணாவிற்கு பிறகு தலைவர் கலைஞர் இல்லாமல் இருந்திருந்தால் இந்த தமிழ்ச் சமுதாயம் நாதியற்று போய் இருக்கும்.

தலைவர் கலைஞர் அவர்களால் தான் தமிழினம் தலை நிமிர்ந்தது. இன்று நம் உயிர் நிகர் தலைவர் தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள், தலைவர் கலைஞர் வழியில் உலகம் போற்றும் வகையில் நல்லாட்சியை தந்து கொண்டிருக்கிறார்கள்.

தலைவர் கலைஞரின் நினைவை போற்றும் வகையில் இன்று (07.08.2023 திங்கள்கிழமை) திருப்பூர் வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து வார்டுகளிலும், கிளைக் கழகங்களிலும் காலை 08.00 மணிக்கு கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுமெனவும், அதனைத் தொடர்ந்து, காலை 09.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள அண்ணா பெரியார் சிலை முன்பு அமைக்கப்படவுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுரு வப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்டக் கழக செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில், திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே. டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அது சமயம் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அணி பொறுப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பொது மக்களையும் அதிக அளவில் பங்குகொள்ள செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

# 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!

